Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BODINAYAKANUR

**C.C No. 610 /2018**

Depositions of - ராணி ..witness for ...Prosecution Side Witness 1 (LW-1)

Name - ராணி (PW- 1 )
Father's and Husband's name - வீரன்
Village -
Taluk -
Caste -
Calling -
Religion -
Age -

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.04.2022.

**சாட்சி அழைக்கப்பட்டு திரு.S.காளிமுத்து, இளநிலை உதவியாளர் என்பவரால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

முதல் விசாரணை-

நான் குலாளர்பாளையத்தில் குடியிருந்து, பனியன் கம்பெனிக்கு தைப்பதற்கு வேலைக்கு சென்றுகொண்டிருக்கிறேன். எதிரியை தெரியும். முதலில் நந்தவன தெருவில் குடியிருந்தபோது, எதிரி மகளிர் சுயஉதவி குழுவில் தலைவியாக இருந்து, அதில் நான் உறுப்பினராக இருந்து லோன் வாங்கியிருந்தேன்.கடந்த 26.11.2018 ம் தேதி என் மகன் செல்வகணேஷ் சவுடாம்பிகா பள்ளியில் ஆறாவது வகுப்பு படித்துகொண்டிருந்தார். வழக்கமாக 4.30 மணிக்கு பள்ளி முடிந்தவுடன் நான்வேலை செய்யும் பனியன் கம்பெனிக்கு என் மகன் வந்துவிட்டு நானும் எனது மகனும் இரவு 9 மணிக்குதான் வீட்டிற்கு வருவோம். அன்றைய தினம் மாலை 5 மணிக்கு எதிரி எனக்கு கைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு, எனது மகனை அழைத்து செல்கிறேன் என்றும், பணம் கொடுத்தால் தான் மகனை விடுவேன் என்றும் கூறினார்கள். மேற்படி கடனில் 25 ஆயிரம் ரூபாய் வாங்கி, 5 வாரங்கள் கட்டியிருந்தேன். மேற்படி பணம் கொடுக்காமல் எனது மகனை விடமாட்டேன் என்றும், நீ எங்கு வேண்டுமானாலும் கம்ப்ளைண்ட் செய் என்று எதிரி கூறினார். பின்னர் நானும், நான் வேலை செய்யும் கம்பெனியில் இருந்த உரிமையாளார் மற்றும் மற்றொரு நபரும் சேர்ந்து, கடந்த 26.11.2018ம் தேதி மாலை 5.30 காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். மேற்படி எதிரி எனது மகனை ரெங்கநாதபுரத்திற்குஅழைத்துசென்றுள்ளார். ரெங்கநாதபுரத்தைசேர்ந்த எனது உறவினர் ஒருவர் எனது மகனை பார்த்து அழைத்து அவர் வீட்டில் உட்கார வைத்தார்கள். மேற்படி எதிரி வேறு ஒரு நபருடன் பேசிக்கொண்டிருந்தபோது என் அங்கிருந்து தப்பி பள்ளி புத்தகப்பையை கொண்டு வந்து என் வீட்டில் வைத்து விட்டு, பக்கத்து வீட்டுக்காரர்கள் நான் காவல்நிலையத்திற்கு போனதாக என் மகனிடம் தகவல் கூறியதால், என் மகன் மாலை 7 மணிக்கு காவல்நிலையத்திற்கு வந்தார். என்னிடம்

காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் நான் கொடுத்ததுதான். **புகார் அதசாஆ.1**. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

மேற்படி புகாரை யார் எழுதியது என்றால் காவல்நிலையத்தில் எழுதினார்கள். எஸ்.ஐ அல்லது போலிசார் எழுதினார்களா என்றால் போலிசார் தான் எழுதினார்கள். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8 வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரில் பள்ளி முடிந்து வந்ததாக இடைச்செருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புகாரில் என் கையொப்பத்திற்கு கீழே 29.11.2018 என்ற தேதி 29 என்பது அடிக்கப்பட்டு 26 ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரை எழுதியவர் இரவு 8 மணிக்கு தான் எழுதியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் முதலில் காவல்நிலையம் சென்று வாய்மொழியாக கூறியதற்கு போலிசார் புகாரை எடுத்துக்கொண்டாலும் இரண்டு காவலர்களை என்னுடன் எதிரியின் வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். அங்கு எதிரியின் மருமகள் தான் இருந்தார். எதிரியின் மருமகள் எனது அத்தைதான் என்னுடைய மகனை அழைதது சென்றுள்ளார் என்றும் நாங்கள் காவல்நிலையத்தில் ஒப்படைத்து விடுகிறோம் என்று கூறினார். பின்னர் எதிரியின் கைப்பேசி சுவிட்ச்ஆப் என்பதால் 5 நிமிடத்தில் மீண்டும் காவல்நிலையத்திற்கு வந்து என் மகன் காவல்நிலையத்திற்கு வந்த பின்னர் தான் புகாரை எழுதினார்கள். நான் இருக்கும் மகளிர் குழுவில் எத்தனை மாதம் பணம் கட்டாமல் இருந்தேன் என்றால் இரண்டு தவணைகள் கட்டவில்லை, 15 நாட்களுக்கு ஒருமுறை தவணை கட்டவேண்டும். மேற்படி பைனான்ஸ் நிறுவனத்தில் குழுவின் தலைவர் பெயரில்தான் கடன் கொடுத்திருப்பார்கள் என்றால் சரிதான். கடனை வாங்கிவிட்டு நான் ஏற்கனவே குடியிருந்த வீட்டை சொல்லாமல் காலி செய்து விட்டேன் என்றால் சரியல்ல, சொல்லிவிட்டுதான் சென்றேன். நான் யாரிடமும் சொல்லாமல் வீட்டை காலி செய்துபோய்விட்டேன் என்றால் சரியல்ல, வீட்டின் உரிமையாளரிடம் சொல்லிவிட்டுதான் சென்றேன். எதிரி இரண்டு முறை கம்பெனியில் வந்து தான் காசு வாங்கினார். குழுவின்தலைவி என்ற முறையில் பைனான்ஸில் கேட்டு தொந்தரவு செய்ததால், நான் எதிரியிடம் சொல்லி கொள்ளாமல் சென்று விட்டதால் எனது வீடு எங்கிருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காகதான் எதிரியானவர் என் மகனை அழைதது சென்றார்கள் என்றால் என் மகனை கேட்டால் தான் தெரியும். நான் வாங்கிய பணத்தை மோசடி செய்வதற்காகதான், எதிரி என் மகனை கடத்தினார் என்று பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரிக்கும்போது கூறினேனா என்றால் ஆமாம். நான் சொன்னதுபோல எதிரி என்மகனை எங்கும் கூட்டிபோகவில்லை என்றும் அடிக்கவில்லை என்றும் நான் தலைமறைவானதால் தான் என் மகனை முகவரி தெரிந்து கொள்வதற்காக அழைத்து சென்றார்கள் என்றால் சரியல்ல. தற்போது வரை மேற்படி கடனை திருப்பி கட்டவில்லை என்றால் சரிதான். மேற்படி லோன் பணத்தை ஏமாற்றிமோசடி செய்வதற்காகதான் பொய்யாக புகார்கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த வித குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி எனது வழக்கில் சாட்சியாக இருப்பவர்கள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் அதுதவறு.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2022.04.23 15:22:48 +0530